**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 331/2018**

திருமதி. அமுதவள்ளி. (D.W –1) **04.08.2023.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் B. Lit படித்துள்ளேன். தாவாச்சொத்தை வாங்கும் போது நான் வில்லங்கச் சான்று பெற்றுத்தான் வாங்கினேன். **வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9** சார்பதிவாளர் கண்காணிப்பாளர் அவர்களால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9** ஆவணங்களில் என் பெயரோ, சண்முகம் என்பவர் பெயரோ வரவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து மனையிடங்களாக தலா 7 செண்ட்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த **பி.வா.சா.ஆ.15** ஆன்லைனில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். க. ச.எண். 487ன் மொத்த வீஸ்தீரணம் 6 ஏக்கர் 75 3/4 செண்ட் ஆகும். 23.03.1993 ல் பாகம் பிரித்துக்கொண்டார்கள். 2018 ஆம் ஆண்டு நான் வங்கியில் கடன் பெற செல்லும் போதுதான் பாகம் பிரித்த விவரம் எனக்குத் தெரியவந்தது. இடம் வாங்கும் போது போட்டுப்பார்த்த வில்லங்கச் சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேன்.

2. மனையிடங்களாக பிரித்தவர்கள் மனையிடங்களை முதலில் 3 1/2 செண்ட்களாக பிரித்து மீண்டும் தலா 7 செண்ட்களாக பிரித்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நாங்கள் வாங்கும் போது 7 செண்ட்களாகத்தான் இருந்தது.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– பா.செல்லதுரை.,
முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.